**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 29/2023** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சரவணன் | **வயது** | : | 47 |
| **த.பெ** | : | கண்ணன் | **தாலுக்கா** | : | போளூர் தாலுக்கா |
| **கிராமம்** | : | களம்பூர் | **தொழில்** | : | விவசாயம் |

**23.02.2026 – வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்து விவரங்களும் உண்மை.

**கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.**

**1) 2**5.11.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா. ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2)** 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி பட்டா **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 05.12.2022 ம் தேதியிட்ட மனை வரி தோராய பட்டா (நகல் ) **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 09.12.2022 தேதியிட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 10.02.2022 தேதியிட்ட உதவி காவல் ஆய்வாளர் களம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் **வா. சா. ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) புகைப்பட நகல் (4 எண்ணிக்கை ) **வா. சா. ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து இந்த வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதல் விசாரணை முடிவடைந்தது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் 1 மற்றும் 2 எனக்கு என்ன உறவுமுறை என்றால் சின்னபொன்னு எனக்கு அத்தை முறை வேண்டும், துளசிதாஸ் 3 ம் நபர் ஆவார். எனக்கும் பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோருக்குமிடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, மேலும் அரசிற்கு

வருவாய் இழப்பு ஏற்படுத்தவேண்டும் என்பதற்கு தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER Digitally signed by SALMA BASEER Date: 2026.03.05 11:17:40 +0530

District Munsif,
Polur.